முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

திட்டக்குடி.

**OS. 31 /2014 PW: 2 07.07.2023**

2023 ஆம் ஆண்டு ஜீலை திங்கள் **07** ம் நாள் வாதி தரப்பு சாட்சியாகிய சேனாதிபதி என்பவரின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டின் 10-வது விதியின் ஏற்பாட்டின்படி திருமதி.T.நித்யகலா, B.Com., B.L., ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சேனாதிபதி | வயது | 49 |
| த/க/. பெயர் | ராமசாமி | தொழில் | விவசாயம் |
| ஜாதி | | கிராமம் | இராமநத்தம் |
| வட்டம் | | மாவட்டம் | |

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன் .எனது தரப்பில் சாட்சியத்தை எழுத்து வடிவில் நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன் . அதில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையென ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டுள்ளேன்.

**குறுக்கு விசாரணை** இறந்துபோன செல்வத்திற்கு என்ன வயது ஆகிறது என்றால் என் வயது இருக்கும் . நீங்களும் அவரும் ஒரே வயது என்பதால் அவர் பிறந்தது தெரியாது என்றால் சரிதான் . நாகம்மாள் என்பவர் அரங்கூரை சேர்ந்த செல்லபெருமாள் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்தார்களா என்றால் எனக்கு தெரியாது. அழகப்ப படையாச்சிக்கும் நாகம்மாளுக்கும் செல்வம் என்பவர் பிறந்தார் என்பது நேரிட்டு தெரியுமா என்றால் தெரியாது . என் தகப்பனார் பெயர் N. ராமசாமி. 1980 ல்நாகம்மாளை அழைத்துகொண்டு வந்து பழ கடை வைத்துள்ளார் என்றாலும் 1990 வரை குடும்பம் நடத்தி வந்தார் என்றாலும் எனக்கு தெரியாது . செல்வம் என்பவர் எப்படி விபத்தில் இறந்துபோனார் என்றால் சரிதான் . மோட்டார் வாகன விபத்துகோரி நட்ட ஈடு வாங்கிய விபரம் தெரியுமா என்றால் தெரியாது . அவர் இறந்து போனதற்கு வாரிதாரர்கள் சத்தியாவும் ஜீவ பாரத்தியும் வாரிசு என்று தான் கண்டு மனு தாக்கல் செய்து நட்ட ஈடு கொடுத்துள்ளார் என்றாலும் உண்மையிலேயே அழக்கப்ப படையாச்சி தகப்பனார் என்றால் அவரையும் அந்த மனுவில் வாரிசாக சேர்த்திருப்பார்கள் என்றால் சரியல்ல . அப்படி சேர்க்காததால்

அழகப்பபடையாச்சி செல்வத்திற்கு தகப்பனார் இல்லை என்றால் சரியல்ல . எதிர்மனுதாரர் சேகர் உங்களுக்கு பங்காளியா என்றால் ஆமாம் . பங்காளி என்பதால் அவருக்கு எதிராக சாட்சி சொல்கிறீர்கள் என்றால் இல்லை.

**மறு விசாரணை இல்லை.**

**Typed to my dictation in the open Court as per the statement of the witness, read over to the witness and admitted by him/her to be correct.**

**(Sd/Nithyakala)**
**Principal District Munsif,**
**Tittagudi.**